செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 302 நாள்: 28/5/18

# பத்திரிக்கை செய்தி

## வேளாண்மைத் துறை

### "மண்பரிசோதனைப்படி உரமிட்டு மண்வளம் காப்போம், உற்பத்தியை பெருக்குவோம்"

"மண்வளத்தை காத்து உணவுதானிய உற்பத்தியை தொடர்ந்து பெருகச் செய்ய வேண்டும்" என்ற உயரிய நோக்கத்துடன் தமிழக அரசு அனைத்து விவசாயிகளுக்கும் மண்பரிசோதனை செய்து மண்வள அட்டைகள் வழங்கி வருகிறது. மண்வளத்தை பாதுகாத்து உணவு தானிய உற்பத்தி மற்றும் வருமானத்தை பெருக்கிடவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க செய்வதில் நீர்வளம், மண்வளம், மண்ணின் தன்மை ஆகியன முதன்மையான பங்குவகிக்கின்றது. பயிர் சாகுபடியில் உயர் விளைச்சல் பெற்றிட தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துகள் உள்ளிட்ட 20 வகையான ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன.

மேற்கூறிய சத்துக்கள் சரியான அளவில் இருந்தால் மட்டுமே, நல்ல மகசூல் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஒரு பயிருக்கான உரத்தேவையை கணக்கிடுவதற்கு மண்ணில் உள்ள சத்துக்களின் அளவு விபரம் அறிந்திட மண்பரிசோதனை செய்வது மிக மிக அவசியமாகும். மண்பரிசோதனை மூலம் நிலத்தில் உள்ள சத்துக்களின் அளவு அறிந்து உரமிட மண்வள அட்டை திட்டம் மூலம் தற்போது விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மண்வள அட்டை திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியுதவியோடு 2015-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் துவங்கப்பட்டு இருவருட சுழற்சி முறையில் (2015-16 & 2016-17 முதல் சுழற்சி மற்றும் 2017-18 & 2018-19 இரண்டாம் சுழற்சி) விவசாயிகள் வயல்களில் கிரிட் முறையில் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மண் ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் முதல் சுழற்சியில் மொத்தம் 67.67 இலட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் சுழற்சியில் இதுவரை 19.22 இலட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2018-19ம் ஆண்டு நிறைவில் மொத்தம் 67.67 இலட்சம் விவசாயிகளுக்கு இரண்டாம் சுழற்சியில் மண்வள அட்டை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்வள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள உர சிபாரிசின்படி, பயிருக்குத் தேவையான உரம் இடுவதால் உரச்செலவு குறைவதோடு மண்வளமும் பாதுகாக்கப்படுகின்றது. சமச்சீரான உரம் இடுவதன் மூலம் மகசூல் கணிசமாக அதிகரிக்கிறது. இதனால் விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கும். எனவே, வரும் காலங்களில் மண்வள அட்டையின் சிபாரிசின் அடிப்படையில் மட்டுமே, விவசாயிகள் உரங்களை விற்பனையாளர்களிடமிருந்து விற்பனை முனைய கருவி (POS) மூலம் பெற்றிட திட்டமிடப்பட்டு வருகிறது.

எனவே, ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய ஆதார் அட்டை, குடும்ப அட்டை வைத்திருப்பதுபோல், மண்வள அட்டையினையும் பாதுகாப்பாக வைத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

மண்வள அட்டை உபயோகத்தினை தமிழகத்தில் அனைத்து விவசாயிகள் மத்தியிலும் பிரபலப்படுத்தும் நோக்கத்தில் நடப்பு ஆண்டில் 31 மாவட்டங்களில், சில கிராமங்களில் மண்வள அட்டையின் சிபாரிசின் அடிப்படையில் மட்டுமே விவசாயிகள் உரங்களை வி[illegible]னையாளர்களிடமிருந்து விற்பனை முனைய கருவி (POS) மூலம் பெற்றுக் கொள்ளும் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, வேளாண் பெருமக்கள் மண்வள அட்டையை பெற்று அதன் பயன்பாட்டினையறிந்து மண்வள அட்டையின் அடிப்படையிலேயே உரமிட்டு, மண்வளம் காத்து அதிக மகசூல் பெற்றிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக

மண் பரிசோதனை நிலையம்
வேளாண்மை உதவி இயக்குநர்
அலுவலகம், குடியாத்தம்.
04171 - 220799